1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைகளுக்கு சொல்லி யிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அந்தப் பயிர்கள் காப்பாற்றப்படவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அரசால் அங்கத்தின ருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

**(ஓ) உசிலம்பட்டி, திருமங்கலம் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து நிவாரணம் வழங்குதல்.**

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டித் தொகுதியில் வாழ்கிற விவசாயி களைப் பற்றிய அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச் சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

உசிலம்பட்டித் தொகுதியில் கடந்த 2 போகங்களாக நெல் அறுவடை செய்யப்படாமல் பயிர்களெல்லாம் காய்ந்துவிட்ட காரணத்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் அந்தத் தொகுதியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பருத்தி சாகுபடியும் சென்ற ஆண்டு முழுமையாகப் பாதிக்கப் பட்டு விட்டது. திருமங்கலம் பகுதியில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர் நெல் விளைச்சலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. அதன் காரணமாகவே தொகுதியிலுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் தஞ்சை மாவட்டத்தையும் மற்ற பகுதிகளையும் நோக்கி மூட்டை முடிச்சுகளோடு நாள்தோறும் நூற்றுக்கணக்கில் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, நிவாரணப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நானும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**(ஓ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம்.**

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்கு நான் இப்போது கொண்டு வருகிறேன்.

அவரிடத்திலிருந்து பதிலும் வரும் என்று எதிர்பார்க்கிறேன். என்னுடைய தொகுதியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள்—பல்லாயிரக்கணக்கான மூட்டைகள்—லாரிகள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக ரோடுகளிலேயே அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு மழை பெய்தாலும் அவ்வளவு மூட்டை களும் முளைத்துப் பாழாகிவிடும். ஆகவே, அந்த மூட்டைகளை அங்கே இருந்து எடுத்துச் செல்வதற்கு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான லாரிகளையெல்லாம் தஞ்சை மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படியில்லையென்றால் மூட்டைகளை எடுக்க மாற்று ஏற்பாடாக வேறு லாரிகளை ஏற்பாடு செய்து கொடுக்கவும், அதைப்போலவே நுகர் பொருள் வாணிபக் கழகத் திற்குக் கொண்டு செல்லப்படுகிற நெல்லை உடனடியாக வாங்கு வதற்கான ஏற்பாட்டையும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர் கள் செய்வாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் பணிகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, அங்கே நெல் மூட்டைகளை எடுத்துச் செல் கிற பிரச்சினையில் அங்கே இருக்கிற லாரி உரிமையாளர்கள் இது தான் சந்தர்ப்பம் என்று கருதி அதிகமான பணத்தைக் கேட்டு, முதலில் தகராறு செய்தார்கள். உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் சாலை யோரங்களிலே அடுக்கி வைக்கக்கூடாது என்றும், உடனுக்குடன் அவற்றை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் கள். மேலும் ஃபுட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான லாரிகள், சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டுக்குச் சொந்தமான லாரிகள் என்று எதுவாக இருந்தாலும் அவற்றை அனுப்பி வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்பட்ட நேரத்தில், 29 லாரிகள்—சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான லாரிகள்—அங்கே உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு அந்தப் பணியிலே ஈடு படுத்தப்பட்டிருக்கின்றன. அதுவும் போதாத காரணத்தால், அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து லாரிகளைக் கொண்டு போய்

*1989 பிப்ரவரி 21]* *[திரு. ஆற்காடு நா. வீராசாமி]*

நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செயயப்பட்டிருக் கிறது. இதற்குப் பின்னும் ஏதேனும் புகார்கள் இருக்குமானால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள்.

(ஔ) திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு.

**திரு. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுக்கால மாக மழை பொய்த்துவிட்டதன் காரணமாக அங்கே இருக்கிற விவசாயிகள் வேலை இல்லாமல், பெங்களூருக்கும் சென்னைக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் வேலையைப் பெறுகிற வகையிலும், அந்தப் பகுதியில் வாழ்கிற விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற வகையிலும் அந்தப் பகுதியில் நில வரியைத் தள்ளுபடி செய்தும், கடன் தள்ளுபடி செய்தும் சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. எனவே அந்த நிலையைப் போக்க, தற்காலிகத் தேவையாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை யைக் குறித்து இரண்டு நாட்களுக்கு முன்பாகத் தமிழகத்திலுள்ள நீர்த் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் அனைவரையும் அழைத்து, உடனடியாக 7 நாட்களுக்குள் அந்தந்தப் பகுதி களுடைய தேவையைப்பற்றி ஒரு அறிக்கையை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமட்டு மல்லாமல், ஆங்காங்கே குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, கூடிய விரைவில் அந்தந்தப் பகுதிகளுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினை யைத் தீர்க்கிற வகையில் செயல்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.